<u>அரக்கோணம் நகராட்சி</u>

<u>சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு</u>

கூட்ட எண்.35 நாள் 12.10.2018.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 15.10.2018 திங்கள் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 15.10.2018 திங்கள் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்(பொ)

அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட்/2018 மற்றும் செப்டம்பர்/2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான போலாட்சியம்மன் நகராட்சி பள்ளியில் மின் இணைப்பு மற்றும் தண்ணிர் வசதிகள் பழுது அடைந்துள்ளது. மேலும், வின்டர்பேட்டை M.A. ஜெயின் நகராட்சி பள்ளியில் தண்ணிர் வசதி இல்லாமலும், கதவு மற்றும் ஜன்னல்கள் பழுதடைந்து உள்ளது. எனவே, மேற்படி பணிகளை செய்ய மதிப்பீடு ரூ.2,50,000/-க்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 1. மன்றம் அனுமதிக்கலாம்,**
**2.மேற்கண்ட பணியினை நகராட்சி கல்வி நிதி 2018-19ன் கீழ் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சியில் கீழ்காணும் பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1. | அம்மா உணவகத்தில் பராமத்து பணிகள் செய்தல் | ரூ.1,50,000/- |
| 2. | நகராட்சி அலுவலக வளாகத்தில் கழிப்பிடம் மற்றும் கதவுகள் பராமத்து பணிகள் செய்தல். | ரூ.7,00,000/- |

மேற்கண்ட பணிகளை அவசர அவசியத்தை முன்னிட்டு செய்ய வேண்டியுள்ளதால் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 1) மன்றம் அனுமதிக்கலாம்,**
**2) மேற்படி பணியை நகராட்சி பொது நிதியில் இருந்து செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட மற்றும் நகராட்சிகு சொந்தமான பகுதிகளில் குடிநீர் அவசர அவசியத்தை முன்னிட்டு கீழ்காணும் பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1. | வார்டு-15 டவுனால் 1வது, 7வது தெருக்கள், வார்டு-6 டவுனால் 3வது, 4வது 5வது தெருக்கள், வார்டு-36 செய்யூர்பாட்டை, சாய் நகர் பகுதிகள் குடிநீர் விநியோக பைப்லைன் அமைத்தல். | ரூ.7,50,000/- |
| 2. | தக்கோலம் நீரேற்றும் நிலையத்தில் ஆழ்துளை குழாய் கிணறுகளின் அறைகளை பழுது பார்த்தல். | ரூ.6,00,000/- |
| 3. | கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் திறந்த வெளி கிணற்றை சுற்றி Fencing அமைத்தல் மற்றும் தக்கோலம் நீரேற்றும் நிலையத்தில் Collection Well அறை, அலுவலக கட்டிடம் பராமத்து பணிகள் செய்தல். | ரூ.6,50,000/- |

மேற்கண்ட பணிகளை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 1) மன்றம் அனுமதிக்கலாம்,**

2) மேற்கண்ட பணிகளை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02 கணேஷ் நகர் 13–வது தெருவில் மழைநீர் கால்வாய் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது எனவே அப்பகுதியில் புதியதாக மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.3.20 இலட்சததிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணயின் அவசியத்தை கருத்தில் கொண்டு பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :06**

இந்நகராட்சி 2017–18ம் ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு சமர்ப்பித்ததிடவும் 36 வங்கி கணக்குகளின் பதிவுகளை நகராட்சி கணக்குடன் இணக்கம் செய்திடவும் மற்றும் வருவாய் நிதி குடிநீர் கல்வி நிதி கணக்குகள் அனைத்தும் புதிய வலைதளம் முலமாக பதிவேற்றம் செய்து 201–18ம் ஆண்டு கணக்கு முடித்து நகராட்சி வசம் ஒப்படைக்கவும் இப்பணியினை வெளி நபர் முலம் பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.1,00,000 /– (ரூபாய் ஒரு இலட்சம்)க்கான மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண் :07**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வேலூர் அவர்களின் செயல்றை கடித எண்.அ2/769/2018 நாள்.05.09.2018 மற்றும் 12.09.18ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019 ஆம் ஆண்டிற்கு கீழ் அரக்கோணம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்குறிப்பிட்ட இரண்டு பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை நகர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரக்கோணம் நகராட்சி, கணேஷ் நகர் 1–வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு, மின்மோட்டார் மற்றும் சிண்டெக்ஸ் அமைத்தல் | 1.50 |
| 2. | அரக்கோணம் நகரம், 36வது வார்டுக்கு உட்பட்ட கற்பகம் நியாய விலைக்கடை எண்.9–க்கு புதிய கட்டிடம் கட்டுதல் | 8.00 |

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் பதிவு செய்யலாம்.**

**2) திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :08**

அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MV.IV) துறை நாள்:19/07/2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MV.IV) துறை நாள்:26/07/2018 ஆகியவற்றில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 01/04/2018 முதல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1, நாள்:20/08/2018-ல் சொத்துவரி பொதுசீராய்வு

மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள், சுற்றறிக்கை மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை 4-ல் உள்ள விதிகளில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் ஆகியவற்றின்படி அரக்கோணம் நகராட்சியில் 01/04/2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படஉள்ளது.

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76-ன்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய விவரங்களின் பட்டியல்:

| வ. எண் | கட்டிடப் பயன்பாடு விபரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள்) | 50% சதவீதத்திற்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள் | 100% சதவீதத்திற்கு மிகாமல் |

அரக்கோணம் நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதன் அடிப்படையில் சொத்துவரி பொதுசீராய்வு செய்யவும் மேற்கண்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு அரக்கோணம் நகராட்சி பகுதியிலுள்ள 360 தெருக்கள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன

**A,B,C என வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரங்கள்**

| **வரிசைஎண்** | **மண்டலம்** | **தெருக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | A | 28 |
| 2 | B | 248 |
| 3 | C | 84 |
| **மொத்தம்** | | **360** |

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76; நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1, நாள்:20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி 01/04/2018-ம் தேதி முதல் அரக்கோணம் நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்துவரி பொதுசீராய்வு செய்திடவும், இந்நகராட்சி பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தியும், ஒவ்வொரு மண்டலத்திற்கும் கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தும் அரக்கோணம் நகராட்சியின் மன்ற தீர்மானம் எண்.402, நாள்:10/09/2018-ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| **மண்டலம்** | **சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு** | |
|---|---|---|
| | **தற்போதைய மதிப்பு** | **உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு** |
| A | 2.10 | 3.15 |
| B | 1.60 | 2.40 |

| | | |
|---|---|---|
| C | 0.80 | 1.20 |

மேலும், அரக்கோணம் நகராட்சியில் உள்ள 360 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி, அம்மண்டலங்களுக்கான அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை 11.9.2018-ம் தேதிய தினமணி நாளிதழில் வெளியிட்டும், நகராட்சி அலுவலக விளம்பரபலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், நகராட்சி வலையதளத்தில் வெளியிட்டும், ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருந்தால் பொதுமக்கள் ஆணையருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் தெரிவிக்க அறிவிக்கப்பட்டது. ஆனால், அறிவிப்புகள் வெளியிடப்பட்டு 30 தினங்கள் 10.10.2018 அன்று முடிவடைந்துள்ள நிலையில் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் எதுவும் வரப்பெறாத காரணத்தால், அரக்கோணம் நகராட்சியில் உள்ள 360 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் மன்றத் தீர்மானம் எண்: 402, நாள்:10.09.2018ன்படி அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்துள்ளதை இறுதி செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2018-ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% சதவீதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட அரக்கோணம் நகராட்சி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரக்கோணம் நகராட்சியில் உள்ள 360 தெருக்கள்/சாலைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. அ) மண்டலம் A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.2.10**லிருந்து **ரூ.3.15** ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

   ஆ) மண்டலம் B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.1.60**லிருந்து **ரூ.2.40** ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

   இ) மண்டலம் C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.0.80**லிருந்து **ரூ.1.20** ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.
4. இந்த மன்ற தீர்மானம் நிறைவேற்றப்படும் நாளிலிருந்து அரக்கோணம் நகராட்சியில் புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது சொத்துவரி திருத்தியமைக்கப்படும் அனைத்து வகையானக் கட்டடங்களுக்கும் இம்மன்ற

தீர்மானத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளபடி மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யவும் மன்றம் இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

<u>ந.க.எண்.1722/2018/ அ1</u>

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சியானது 17.04.1984 அன்று முதல் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011ம் ஆண்டின் படி மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 78395 ஆகும். இந்நகராட்சி மொத்தம் 09.06 சதுர கி.மீ பரப்பளவில் 36 வார்டுகளைக் கொண்டது. இந்நகரில் சுமார் 17,147க்கும் மேற்படி குடியிருப்புகளும், வர்த்தக நிறுவனங்களும் உள்ளன. இதன் மூலம் நாள் ஒன்றிற்கு சுமார் 28 மெட்ரிக் டன் அளவு குப்பைகள் சேகரிக்கப்பட்டுவருகிறது. இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் தோற்றுவிக்கப்பட்ட 164 துப்புரவு பணியாட்களில் 121 துப்புரவு பணியாளர்களே பணிபுரிந்து வருகின்றனர். அதில் 43 பணியிடங்கள் காலியாக உள்ளது.

. அரசாணை எண்.101, நாள்:30.04.1997ன் படி இந்நகராட்சியில் திடக்கழிவு பணிகளை செய்ய 348 துப்புரவு பணியாளர்கள் தேவை (கணக்கீட்டுப்படிவம் இணைக்கப்பட்டுள்ளது), தற்போது உள்ள பணியாளர்களை கொண்டு தினசரி உருவாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை விதி 2016ன் படி அனைத்து குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனத்தாரரிடமிருந்து குப்பையை தரம்பிரித்து வாங்கும் பணியினை சிறப்பாக செவ்வனே செய்ய இயலாமல் திடக்கழிவுப் பணிகளில் பெரும் பின்னடைவு ஏற்படுகிறது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் மக்களுக்கான அடிப்படை வசதிகள் வழங்குவதில் உள்ள குறைபாடுகளைப் போக்க திடக்கழிவுப் பணிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பணிகளை மேற்கொண்டு தனியார் ஒப்பந்ததாரர் மூலம் செய்து கொள்ளவும், அதற்கான உரிய அனுமதியை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பெற்று பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அரசாணை எண்.101 , நாள்:30.04.1997ன் படி தற்போது அரக்கோணம் நகராட்சியில் 348–121 =227 துப்புரவு பணியாளர்கள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி பணிகளை மேற்க்கொள்ள வேண்டியுள்ளது. வேலூர் மாவட்ட ஆட்சியர் துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றிற்கு நிர்ணயம் செய்த கூலி ரூ.308/– என்ற அடிப்படையில் ஆகும் செலவினம் மாதம் ஒன்றிற்கு ரூ.26,87,082/–ஆகும். துப்புரவு பணியாளரை நிரந்தர பணியாளராக நியமிக்க மாதம் ஒன்றிற்கு ஆகும் செலவினம் ரூ.41,57,051/– மற்றும் கூடுதலாக விடுப்புகள், சீருடை, போனஸ் போறவ்றறை வழங்க வேண்டியுள்ளது, எனவே தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளும் பட்சத்தில் செலவு குறைவாகிறது.

அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) நாள்:30.04.1997ன் அளவுகோலின் படி தேவையான 227 தற்காலிக துப்புரவு பணியாளர்களை தனியார் ஒப்பந்த அடிப்படையில் நகராட்சியில் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு பணியமர்த்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதிக்கு அனுப்பலாம்.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோா ஒப்பந்த அடிப்படையில் 227 பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தவும், அதற்கு ஒரு வருடத்திற்கு ஆகும் செலவினம் ரூ.3.43 கோடி நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/826/2015)**

**பொருள் எண் 10**

இந்நகராட்சியில் A,B,C, பிரிவுகளில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் கீழ்காணும் லாரிகளின் டயர்கள் தேய்ந்து போன நிலையில் உள்ளதால் லாரிகளை இயக்க சிரமமாக உள்ளது. எனவே பொதுசுகாதார நலன் கருதி புதிய டயர்களை மாற்றம் செய்து கொள்ளவும், உள்ளூர் விலைப்புள்ளியின்படி தோராய செலவினம் ரூ.3.25 லட்சம் செலவினத்திற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| S NO | VEHICLE NUMBER | VEHICLE DETAILS | FRONT | BACK | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | TN73W2316 | TIPPER LORRY | 2 | 2 | **4** |
| 2 | TN23AS6296 | DUMPER PLACER LORRY | 2 | 2 | **4** |
| 3 | TN23AS6307 | TIPPER LORRY | 2 | 2 | **4** |
| 4 | TN73V5358 | DUMPER PLACER LORRY | 2 | 2 | **4** |
| 5 | TN73W2299 | DUMPER PLACER LORRY | 2 | 2 | **4** |
| 6 | TN23AR7435 | FRONT END LOADER (JCB) | - | 2 | **2** |
| 7 | TN73V9270 | DOG TRAVELLING VEHICLE | 2 | 2 | **4** |
| 8 | TN23X 6607 | TIPPER LORRY | 2 | 4 | **6** |
| | | | | **Total** | **32** |

அலுவலக குறிப்பு : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1374/எச்1/2018)

**பொருள் எண் 11**

இந்நகராட்சியில் A,B,C, பிரிவுகளில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் லாரிகளின் டயர்கள் தேய்ந்து போன நிலையில் உள்ளதால் புதிய டயர்களை மாற்றம் செய்து கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | டயர்கள் எண் விவரம் | MRF TYRES VIJAYALAKSHMI AGENCIES, ARAKKONAM ஒன்றின் விலை | G.N.AGENCIES ARAKKONAM ஒன்றின் விலை |
|---|---|---|---|
| 1 | 825 X16 - FRONT | 9000 | 9250 |
| 2 | 825 X16 - BACK | 10000 | 10250 |
| 3 | 145 X 12 | 2400 | 2500 |
| 4 | 16.9 X 28 JCB BACK | 28500 | 29000 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய MRF TYRES VIJAYALAKSHMI AGENCIES, ARAKKONAM, அவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவின தொகை ரூ.3.25 லட்சம் வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான செலவின தொகை ரூ.3.25 லட்சம் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1374/எச்1/2018)**

**பொருள் எண் 12**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வந்த குப்பை லாரி எண். TN 23 AS 6307 தகுதிச்சான்று பெற பழுதுகளை சரிசெய்ய **T.V.SUNDRAM IYENGAR & SONS LTD, BIG KANCHIPURAM,** நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க உள்ளதாலும் இந்நகராட்சியில் போதிய அளவில் வாகனங்கள் இல்லாத காரணத்தால் ஏற்கனவே வாலாஜா அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒரு வாடகை டிராக்டர் நாள் ஒன்றுக்கு ரூ. **1650/-** வீதம் **01.07.2018** தேதி முதல் **31.07.2018** வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண்**376** நாள் **29.06.2018** ல் அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது **01.10.2018** முதல் **31.12.2018** ஆம் மாதம் வரை ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. **1.60** லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தப்பட்டு வருவதற்கும், மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ. 1.60 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்919/எச்1/2015)**

**பொருள் எண் 13**

அரக்கோணம் நகராட்சி **2018–2019** ஆம் ஆண்டிற்கான ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு Out Sourcing முறையில் **14** தற்காலிக பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே **14** தற்காலிக பணியாளர்களை வழங்கி வரும் திரு.G.ரவி, ஒப்பந்ததாரர் அவர்களின் மூலம் **01.06.2018** தேதி முதல் **31.08.2018** வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான செலவின தொகை ரூ.**5.00** லட்சத்திற்கும் மன்ற தீர்மான எண் **367** நாள் **31.05.2018**ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது **01.09.2018** தேதி முதல் **31.12.2018** தேதி வரை தொடர்ந்து பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**5.00** லட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** **2018–2019** ஆம் ஆண்டிற்கு **14** பணியாளர்களின் மூலம் நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே **14** தற்காலிக பணியாளர்களை வழங்கி வரும் திரு.G.ரவி, ஒப்பந்ததாரர் அவர்களின் மூலம் **01.09.2018** தேதி முதல் **31.12.2018** தேதி வரை தொடர்ந்து பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**5.00** லட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 14**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்களை செப்டம்பர் **2018**ம் மாதம் வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் **372** நாள்**29.06.2018–**ல் ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது **17.09.2018** தேதிய டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பற்றிய மாவட்ட வாரந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்கள் தொடர்ந்து DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே அக்டோபர் **2018** முதல் டிசம்பர் **2018**ம் மாதம் வரை தொடர்ந்து 85 DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.**19.00/–** லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே பணி செய்து வரும்

மூன்று மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் தொடர்ந்து பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று 85 DBC பணியாளர்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதற்கும்,மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.19.00/– லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 061/எச்1/2017)

**பொருள் எண் 15**

அரக்கோணம் நகராட்சி 2018–2019 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்த அடிப்படையில் 8 ஓட்டுநர்கள் Out Sourcing முறையில் ஓட்டுனர் பணியில் ஈடுபடுத்த நகரமன்ற தீர்மானம் எண்.297,நாள்: 28.02.2018 அனுமதி பெறப்பட்டு தினகுரல் தமிழ் நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டு 28.03.2018 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்றைய தினம் நிர்வாக நலன் கருதி தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. எனவே Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் பணி உத்திரவு 31.03.2018 தேதியுடன் முடிவடைவதால் பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே 6 ஓட்டுனர்களை வழங்கி வரும் Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் 01.07.2018 முதல் 31.08.2018ஆம் மாதம் வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 377 நாள் 29.06.2018 தேதியில் தோராய செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர், எனவே நிர்வாக நலன் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே 6 ஓட்டுனர்களை வழங்கி வரும் Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் 01.09.2018 தேதி முதல் 31.12.2018 வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான செலவின தொகை ரூ.3.70 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஓட்டுநர்களை பயன்படுத்தி கொள்ளவும், உத்தேச செலவின தொகை ரூ.3.70/–லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**